<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 21/2025 | சாட்சியம் | : | **PW1** |
| **Name** | : | திரு.ராஜ்குமார் | | | |
| **Date** | : | **15.05.2026** | | | |
| **Time** | : | **12.02 a.m to 12.03 p.m** | | | |

<u>ம.த.சா.**1.**திரு.ராஜ்குமார் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் என்ன வேலை செய்தேன் என்ற விவரத்தை சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் Fixture Maintenance பிரிவில் Corrections வேலை செய்து வந்தேன். Corrections வேலை என்பது Executive நிலையில் உள்ள வேலை என்றால் சரியல்ல. நான் Executive ஆக வேலை பார்த்து வந்தேன் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 120 பேர் நிரந்தர பணியாளராக இருந்ததாகவும் அதில் 70 பேர் மேலாளர், மேற்பார்வையாளர் போன்ற உயர் அதிகாரிகளாக பணியாற்றியதாக கூறி உள்ள நிலையில் நானும் அந்த உயர் அதிகாரிகளில் உள்ளடங்குவேன் என்றால் இல்லை. OP.33/2021 வழக்கின் முழு விவரம்

தெரியும். மேற்படி வழக்கில் எனக்கு என்ன பரிகாரம் வழங்கப்பட்டது என்றால் மீண்டும் பணி வழங்கவும், எனக்கு எதிரான நடவடிக்கையை ரத்து செய்தும், பின்சம்பளம் வழங்கியும் இதர சலுகைகள் வழங்கியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கின் முழு விவரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த மனுவில் என்ன பரிகாரம் கேட்டு உள்ளேன் என்றால் 2020-2021 க்கான நிலுவை தொகை 2021-2024 க்கான சம்பள நிலுவை தொகை, தீபாவளி போனஸ், ஆயுத பூஜை பரிசு ஆகியவை கேட்டு உள்ளேன். மேற்படி நிலுவை தொகையாக ரூ.17,00,680/- கேட்டு உள்ளேன் என்றால் ஆமாம். பணி நீக்கம் செய்யப்பட்டதில் இருந்து இன்றைய தேதி வரை வேறு வேலை செய்து வருகிறேனா என்றால் இல்லை. என் பணி நீக்கத்திற்கு பின்னர் எந்த வகையில் வருமானம் வருகிறது என்றால் வருமானம் எதுவும் இல்லை. என் மனைவி வேலை செய்து அதன் மூலம் வருமானம் வருகிறது. OP.33/2021 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக Writ மனு நிலுவையில் இருக்கும் காரணத்தினால் நான் தொழிலாளி என்ற வரையறைக்குள் வருவேனா என்பதை பொருத்து இறுதி நிலை எட்டாத காரணத்தினால் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:15.05.2026.